அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதங்கள் 3/2003.

எனது இல.11576E 16(1) தற்காலிக
அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு -07.
08.10.2003

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபை பிரதான செயலாளர்களுக்கும்,
திணைக்கள தலைவர்களுக்கும்.

## அரசு அலுவலர்களுக்கு நட்டஈடு நலன்களை வழங்குதல்.

1988.07.13, 1989.11.30 மற்றும் 1993.09.21 ஆந் திகதிய 21/88, 59/89, 22/93 இலக்கம் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின் பால் தங்களது கவனத்தை கோறுகின்றேன்.

02 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 29/93 இல் 01 ஆம் பந்தியில் தெளிவுபடுத்தியுள்ள காரணங்களினால் அரச அலுவலர்களுக்கு முகம் கொடுக்க நேரிடும் விபத்துக்கள் தொடர்பில், அச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி நட்டஈடுகளை பெற்றுக்கொள்ளலாம்.

03 கடமையில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் பயங்கரவாத வன்செயல்கள் காரணமாக காயங்களுக்கு உள்ளாகும் அரசு அலுவலர்களுக்கு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 21/88 இன் ஏற்பாடுகளின் படி நட்டஈடு வழங்கலாம்.

04 1989.11.30 ஆந் திகதிய 59/89 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையினால் பயங்கரவாத வன்செயல்கள், குழப்பச் செயல்கள் காரணமாக ஏற்படும் காயங்கள் அல்லது மரணங்கள் மற்றும் கடமையில் ஈடுபட்டிருக்கும் போது அல்லது ஈடுபடாதிருக்கும் போது ஏற்படும் காயங்கள் அல்லது மரணங்களுக்காக அரசு அலுவலர்களுக்கு நட்டஈடு செலுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 22/93 மற்றும் 21/88 இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள் இரண்டில் காட்டப்பட்டுள்ள நலன்கள் இரண்டையும், அலுவலரொருவர் பெற முடியாதென்றும் அலுவலரொருவர் மிக நன்மையுடைய ஒரு நலனை பெறுவதற்கு மட்டுமே உரித்துடையவர் ஆவார் என்றும் 59/89 இலக்க சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியில் தெளிவாக காட்டப்பட்டுள்ளது.

05 இவ் ஆலோசனைகளை மீறி சில அலுவலர்களுக்கு இவ் இரண்டு சுற்றறிக்கைகளினாலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதென எனக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 59/89 இன் ஏற்பாடுகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டுமென இத்தால் வலியுறுத்துகின்றேன்.

ஒப்பம்.எஸ்.சீ.மான்னப்பெரும,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
முகாமைத்துவ, மறுசீரமைப்பு
அமைச்சு.